உ

கணபதிதுணை.

குருநமச்சிவாயசுவாமிகள்

அருளிச்செய்த

அண்ணாமலைவெண்பா.

இஃது,

சென்னபட்டணம்

வை. புஷ்பரதசெட்டி அண்டு கம்பினியாரது

கலாரத்நாகரம் என்னும்

தமது அச்சுக்கூடத்திற் பதிப்பித்து

பிரசுரிக்கப்பட்டது.

1896.

சிவமயம்.

அண்ணாமலை வெண்பா.

ஆதிநடு மாடுமலை யன்றிருவர் தேடுமலை
சோதிமதி யாட.ரவஞ் சூடுமலை - நீதி
தழைக்குமலை ஞானத் தபோதனரை வாவென்
றழைக்குமலை யண்ணா மலை. (க)

அன்பர் பிறப்பை யகற்றுமலை யன்பரல்லா
வன்பர் பிறப்பை வளர்க்குமலை - யன்பை
வடிக்குமலை சிங்கத்தை வந்துசிம்பு ளாகி
யடிக்குமலை யண்ணா மலை. (உ)

கூற்றை யுதைத்தமலை கோமாறன் கூடல்வைகை
யாற்றை யடைத்தமலை யாரூரன் - போற்றச்
சிறந்தமலை தீவினையேன் செய்தகுறை யெல்லா
மறந்தமலை யண்ணா மலை. (ங)

ஏழைக் கிரங்குமலை யேதேது கேட்டாலுங்
கோழைப் படாமற் கொடுக்குமலை - வேழ
முரித்தமலை யம்மைக் கொருபாக மீந்த
மருத்துமலை யண்ணா மலை. (ச)

கண்டங் கரியமலை கண்மூன் றுடையமலை [குத்
யண்டரெல்லாம் போற்றற் கரியமலை - தொண்டருக்
தோற்றுமலை நாளுந் தொழுவோ ரெழுபிறப்பை
மாற்றுமலை யண்ணா மலை. (ரு)

அன்னமுடன் சொன்ன மளிக்குமலை யாதரிப்போ
ருன்னுவர மெல்லா முதவுமலை - துன்னுபுகழ்
கொண்டமலை யங்கிக் கொழுந்தாகி யண்டமுற
மண்டுமலை யண்ணா மலை. (சு)

மாமா தவனமச்சி வாயன் றினவொருவெண்
பாமாலை சாத்திப் பணியுமலை - காமாதி
யென்னுமலை தான்கடந்தோ ரின்பத் திருவுளத்தே
மன்னுமலை யண்ணா மலை. (எ)

அஞ்சக் கரமா யமர்ந்தமலை யாதரிப்போர்
வஞ்சக் கருவினையை மாற்றுமலை - நெஞ்சைத்
திருத்துமலை மெய்ஞ்ஞான சித்திதருந் தெய்வ
மருத்துமலை யண்ணா மலை. (அ)

தொண்டர் வலமாகச் சூழுமலை சூழுமவர்
பண்டைவினை யெல்லாம் பறிக்குமலை - யண்ட
முருவுமலை யெந்தைகுரு வேநமச்சி வாயன்
மருவுமலை யண்ணா மலை. (கூ)

கொம்பனைய பேதைக் குறமகளிர் வானிலுறு
மம்புலியி னேடுவிளை யாடுமலை - செம்பவள
மொத்தமலை சற்குருவா யொண்கழலென் சென்னியி
வைத்தமலை யண்ணா மலை. [ன்மேல்

ஞானகுரு நாத னமச்சிவா யன்கருணை
யானபர னுகியெனை யாண்டமலை - வானவர்கள்
போற்றுமலை தீவினையேன் புந்திக் கவலையெல்லா
மாற்றுமலை யண்ணா மலை. (கக)

சரண கமலந் தனைப்புகழுந் தொண்டர்
மரண பவத்துயர மாறக் - கருணை
பொழியுமலை தட்டுப் புழுகுபனி நீரே
வழியுமலை யண்ணா மலை. (கஉ)

அன்பர் கருத்தி லனவரத மேவுமலை
துன்ப மகலத் துரத்துமலை - யின்பம்
விளைக்குமலை செம்பொன்மக மேருவினை வில்லா
வளைக்குமலை யண்ணா மலை. (௧௩)

நண்பாக் குகையி னமச்சிவா யன்கருத்தில்
வெண்பாப் பயிராய் விளையுமலை - திண்பா
ரளந்தமலை செஞ்சுடரா யன்றிருவர் தேட
வளர்ந்தமலை யண்ணா மலை. (௧௪)

சீதமல ரோனெடுமா றேடுமலை யன்பருக்குப்
பாதமலர் வீடாய்ப் பலிக்குமலை - மாதவர்கண்
மொய்த்தமலை யுண்ணா முலையுமையைப் பாகத்தில்
வைத்தமலை யண்ணா மலை. (௧௫)

வைத்தநிதி யோநமச்சி வாயகுரு நாடோறு
மெய்த்தமிழி னற்புகழ்ந்து மேவுமலை - யெத்திசையு
மின்னுமலை மாதுடனே வெள்ளிமலை வீடாக
மன்னுமலை யண்ணா மலை. (௧௬)

முக்கோண மாக முளைத்தமலை முண்டகன்மா
லக்கோடு நாக மணிந்தமலை - திக்கோடு
துன்னுமலை தன்னைத் துதிக்குமடி யாருளத்தின்
மன்னுமலை யண்ணா மலை. (௧௭)

வண்டமிழா லோநமச்சி வாயகுரு வேத்துமலை
கண்டுதொழு வார்க்கினிய காட்சிமலை - யண்டமுற
நீளுமலை போற்றி நினைக்குமடி யாருளத்தே
வாழுமலை யண்ணா மலை. (௧௮)

அஞ்செழுத்தாய் வேதமா யாகமமாய் நின்றமலை[தே
விஞ்செழுத்தா யொன்றாய் விளங்குமலை - நெஞ்சகத்
தைத்தமலை நாயேனைத் தன்னடியார் கூட்டத்தில்
வைத்தமலை யண்ணா மலை. (௧௯)

மன்னு மோனமச்சி வாயகுரு செந்தமிழாற்
பன்னு மேத்திப் பணியுமலை - யெந்நாளு
மெய்க்குமலை பொல்லா வினையேனைத் தன்னடிக்கீழ்
வைக்குமலை யண்ணா மலை. (உ0)

எந்தை குருநாத னிருக்குமலை யென்பாச
பந்தமற நோக்கிப் பரித்தமலை - சந்திரனைத்
தேய்த்தமலை நாயடியேன் சிந்திக்குஞ் சிந்தனைக்கே
வாய்த்தமலை யண்ணா மலை. (உக)

அஞ்ஞானக் கங்கு லகற்றுமலை யன்பர்க்கு
மெய்ஞ்ஞானச் சோதி விளக்குமலை - துஞ்ஞானச்
சந்தமலை நாயேற்குத் தந்தைதாய் சற்குருவாய்
வந்தமலை யண்ணா மலை. (உஉ)

நீற்றை யணிந்தமலை நீள்சுடராய் நின்றமலை
யேற்றைப் பரியாக வேறுமலை - கூற்றை
யுதைத்தமலை யன்றரியை யோர்சிம்பு ளாகி
வதைத்தமலை யண்ணா மலை. (உங)

ஓலமிடுந் தேவர்குழா முய்யத் திருமிடற்றி
லாலவிடந் தன்னை யடக்குமலை - நாலுமறை
யந்தமலை நாயேனை யாளக் குருவாகி
வந்தமலை யண்ணா மலை. (உச)

ஆதி நெடுமா லயன்காண வன்றுபரஞ்
சோதிச் செழுஞ்சுடராய்த் தோன்றுமலை - வேத
முழங்குமலை சிந்திப்பார் முன்னின்று முத்தி
வழங்குமலை யண்ணா மலை. (உரு)

வந்துலகி லோனமச்சி வாயகுரு வாயடியேன் [னை
சிந்தைகுடி கொண்டிருக்குந் தெய்வமலை - முந்தைவி
நீக்குமலை சொல்லரிய நீள்பிறவித் துன்பமெல்லா
மாய்க்குமலை யண்ணா மலை. (உசு)

சத்திக் கொருபாகந் தான்கொடுத்து நின்றமலை
முத்திக்கு வித்தாய் முளைத்தமலை - யெத்திசையும்
போற்றுமலை போற்றிப் புகழ்வா ரெழுபிறப்பை
மாற்றுமலை யண்ணு மலை. (உஎ)

வால மதியை மௌலியின்மேல் வைத்தமலை
சீலமுனி வோர்கள் செறியுமலை - காலங்
கடந்தமலை சீறிவருங் காலனைக்கா லாலே
யடர்ந்தமலை யண்ணு மலை. (உஅ)

சிட்ட ரிடருஞ் சிவநீதி யில்லாத
துட்டர் சுகமுந் துடைக்குமலை - நட்டம்
பயிலுமலை யெவ்வுலகும் பாழ்படுமென் றால
மயிலுமலை யண்ணு மலை. (உகூ)

கண்ட மிருளக் கடுவிடத்தை வானவர்க்கா
வுண்டுபிரா னாகி யுதவுமலை - தொண்ட
ரிணங்குமலை வானோரு மேனோரும் போற்றி
வணங்குமலை யண்ணு மலை. (௩0)

துன்பப் பசிதீர்க்குஞ் சுத்தசிவ ஞான
வின்பப் பசுந்தே னிருக்குமலை - யன்பர்க்
கிருளுமலை வாராம லெப்போதுங் காட்சி
யருளுமலை யண்ணு மலை. (௩௧)

செகமருவு மைம்புலனிற் சேராமன் ஞானச்
சுகமருவ மேன்மைபுனை தொண்ட - ரகமருவுந்
தூயமலை வஞ்சகர்க்குத் தோன்றும லேயொளிக்கு
மாயமலை யண்ணு மலை. (௩௨)

கரத்தி லினிய கனபொருளைத் தந்துஞ்
சிரத்தி லடியிணையைச் சேர்த்தும் - பரத்து
மிகத்துமலை வாராம லென்குருவா யாண்ட
மகத்துமலை யண்ணு மலை. (௩௩)

பற்றி யிமையோர் பகைதெறுவான் வந்தெதிர்த்த
வெற்றி மதராசன் வேகவே - யுற்று
விழித்தமலை தக்கனார் வேள்விதனை முன்னா
ளழித்தமலை யண்ணா மலை. (௩௪)

பாட றனைவிரும்பிப் பாவலர்க்கா கப்பரவை
வீடுதனக் கிருகால் மேவியே - கூட
விணக்குமலை தன்புகழை யெண்டிசைக டோறு
மணக்குமலை யண்ணா மலை. (௩௫)

கந்திக்குந் தேமாங் கனிபறித்துக் கார்க்கடுவன்
மந்திக்கு நல்கி மகிழுமலை - சிந்திக்கு
மெண்ணமலை வற்றோர்க் கினியமலை யோரஞ்சு
வண்ணமலை யண்ணா மலை. (௩௬)

உன்னு தவம்புரியு மோநமச்சி வாயகுரு
மன்னுங் கருணைமுகில் வாழுமலை - பென்னம்
பெரியமலை மாலும் பிரமனுந் தேடற்
கரியமலை யண்ணா மலை. (௩௭)

வேண்டு மயன்மால் விழிமனத்துக் கெட்டாம
னீண்டுதழற் பிழம்பாய் நின்றமலை - யாண்ட
கருணைமலை யொப்புரைத்துக் காணவரி தான
வருணமலை யண்ணா மலை. (௩௮)

வீடு முதலா விரும்பும் பொருளனைத்தும்
பாடுமடி யார்க்குப் பலிக்குமலை - நீடுபுகழ்
பூண்டமலை சற்குருவாய்ப் பொல்லாச் சிறியேனை
யாண்டமலை யண்ணா மலை. (௩௯)

அனைத்துலகும் போற்றுதிருவைந்தெழுத்தை யோதி
தனைத்தொழுது பேணுந் தவத்தோர்-நினைத்தவர [த்
நல்குமலை யெந்நாளு நல்லோரு நன்னெறியு
மல்குமலை யண்ணா மலை. (௪௦)

மானனைய கண்ணார் வசமாகி நாயடியே
னூனவினைக் காட்டி லுழலாமன் - ஞானநெறி
காட்டுமலை தன்னைக் கருதுமடி யாரிடரை
வாட்டுமலை யண்ணு மலை. (சக)

பிள்ளை யறுத்துதவும் பேரா ளனையுவந்து
கொள்ள வயிரவமெய்க் கோலமாய் - மெள்ள
நடந்தமலை சிம்புளாய் நாரசிங்க ரூபை
யடர்ந்தமலை யண்ணு மலை. (சஉ)

உய்யவரந் தந்தருளு மோநமச்சி வாயகுரு
வையமுழு துந்துதிக்க வாழுமலை - துய்யவரந்
தேக்குமலை நல்லோர் செறியுமலை பெண்ணையா
ளுக்குமலை யண்ணு மலை. (சங)

உண்ணு முலையா ளொருபாக மானமலை
கண்ணு ரமுதாய காட்சிமலை-விண்ணோர்
துதிக்குமலை யன்பர் தொழுதேத்தி நாளு
மதிக்குமலை யண்ணு மலை. (சச)

நாதனரு ளாள னமச்சிவா யன்கனிவா
யோதுதமிழ் மாலை யுகந்தமலை - பாதிமதி
சூடுமலை பத்திசெயுந் தொண்டருடன் கூடிவிளை
யாடுமலை யண்ணு மலை. (சரு)

தேவரையுந் தேவருக்குத் தேவராச் செப்புமொரு
மூவரையு மண்ணோர் முனிவரையும் - யாவரையும்
பெற்றமலை தன்பெருமை பேசுங்காற் ருய்தந்தை
யற்றமலை யண்ணு மலை. (சசா)

நேசிக்கு மன்பர் நினைவுகொடு பாவித்துப்
பூசிக்கும் பூசை பொருந்துமலை - யாசைக்குள்
வீழுமலை பற்றொழிந்த மெய்யடியார் நெஞ்சகத்தில்
வாழுமலை யண்ணு மலை. (சஎ)

நன்றிபுனை நண்ப னமச்சிவா யன்றினமுந்
துன்றுமலர் தூவித் துதிக்குமலை - யன்றிருவர்
தேடுமலை சந்ததமுந் தில்லைச்சிற் றம்பலத்தே
யாடுமலை யண்ணா மலை. (சஅ)

நெஞ்சகத்தி லொன்று நினைப்பார்க்கு மாலறியாக்
கஞ்சமொத்த பொன்னடியைக் காட்டுமலை-யஞ்செழு
த்தி, னுமமலை யம்பிகையுண் ணாமுலையம் மைக்குகந்த
வாமமலை யண்ணா மலை. (சகூ)

புன்றலையின் மாயன் புவியிடந்துங் காணரிய
நன்றிதரும் பொன்னடியை நாடியே - யென்றுமொரு
நாளுமலை வாராம னாயேனைச் சற்குருவா
யாளுமலை யண்ணா மலை. (ருo)

சண்ட விடத்தைச் சகமிறந்து போகாமற்
கொண்ட திறம்பாடிக் கொண்டாடித் - தொண்டர்
பணியுமலை மெய்ம்முழுதும் பால்வெள்ளை நீற்றை
யணியுமலை யண்ணா மலை. (ருக)

தில்லைவனங் காசி திருவாரூர் தென்மதுரை [மறை
நெல்லையினும் பேரொளியாய் நின்றமலை - தொல்லை
பாடுமலை சந்ததமும் பத்தரக மேவிநட
மாடுமலை யண்ணா மலை. (ருஉ)

மூலமுத லுண்ணா முலையென்று மன்பருக்குச்
சாலவர மீந்தருளுந் தாயென்று - நாலுமறை
பேசமலை பாகம் பிரியாச் சிவஞான
வாசமலை யண்ணா மலை. (ருங)

தொன்மைதுரைச் சுந்தரற்காத் தூதுபோய் வந்தமலை
நன்மைதரத் தொண்டருக்கு நல்குமலை-மன்மதனைக்
காய்ந்தமலை கூடலிற்சங் கத்தா ருடன்றமிழை
யாய்ந்தமலை யண்ணா மலை. (ருச)

புண்டரிகன் மாறேடிப் பொன்முடியும் பொன்னடியுங்
கண்டறிய வொண்ணாத காட்சிமலை - தொண்டருடை
யூனமலை பற்றறுக்க வோநமச்சி வாயகுரு
வானமலை யண்ணா மலை. (ருரு)

துன்றுமலர் சோலைதொறுஞ் சூழமலைச் சோனையென
மன்றல் கமழு மதுமாரி - யென்றும்
பொழியுமலை மாருமற் பூஞ்சுனைநீர் பொங்கி
வழியுமலை யண்ணா மலை. (ருசா)

வேட்ட வடியார் விளக்குஞ் சிவஞான
நாட்டம் பொழிபேரா னந்தநீ - ராட்டக்
குளிக்குமலை நாளுங் குறைவிலாச் செல்வ
மளிக்குமலை யண்ணா மலை. (ருஎ)

நீலமலை தேடரிதாய் நின்றமலை நின்றதழற்
கோலமலை மன்றிற் குனிக்குமலை - மூலமலை
யந்தமலை சுந்தரற்கா யன்றிரவிற் றூதுபோய்
வந்தமலை யண்ணா மலை. (ருஅ)

தளையெலா முய்யத் தனித்திருந்து செய்யுங்
களையிலா மாதவத்தைக் கண்டு - விரவியொரு
பாகமலை மாதுபெறப் பாலித்து நின்றருளு
மாகமலை யண்ணா மலை. (ருகூ)

கள்ளப் புலவேடர் கைவசமா கக்கனிந்து
தெள்ளித் தெளிந்தோர் செறிவாக - வுள்ளக்
கருத்துமலை யாதிருக்கக் காட்சிதருந் தெய்வ
மருத்துமலை யண்ணா மலை. (சா0)

முக்குணமு மைம்புலனு மூளா வகையடக்கி [ம்
யொக்குமுணர் வாயிருப்போ ருள்ளத்தே-புக்குலவு
பாதமலை தாய்வயிற்றிற் பார்மீதில் வந்துபிற
வாதமலை யண்ணா மலை. (சாக)

பண்ணடுத்த கூடற் பழம்பதியிற் பிட்டமுதை
யுண்ணடுத்து வைகை யுடையாமன்-மண்ணெடுத்துப்
போடுமலை சந்ததமும் பொன்னம் பலத்தினட
மாடுமலை யண்ணா மலை. (௯௨)

அண்டமுழு தும்பறந்தே யன்னவுரு வாய்த்தேடி
மண்டலமெ லாங்கோல மாய்த்தேடிப் - புண்டரிகன்
சீர்க்கமலை கோனறியாத் தெய்வச் சிவஞான
மார்க்கமலை யண்ணா மலை. (௯௩)

கூனற் சிறுபிறையைக் கோளரவுக் கஞ்சாமல்
வானப் பணிசடைமேல் வைத்தமலை - ஞானச்
சரதமலை யானந்தத் தாண்டவத்துக் கேற்ற
வரதமலை யண்ணா மலை. (௯௪)

பொருந்துதலைச் சங்கப் புலவர்தமைப் போலே
விசிந்தபுகழ்க் கூடலிலே மேவி - யருந்தமிழை
யாய்ந்தமலை பார்மீதி லங்கெழுத்த னாகிவந்து
வாய்ந்தமலை யண்ணா மலை. (௯௫)

ஆதிமலை யாதி யநாதிமலை யம்மையொரு
பாதிமலை யோதிமறை பாடுமலை - நீதிமலை
தந்த்ரமலை யந்த்ரமலை சாற்றியபஞ் சாக்கரமா
மந்த்ரமலை யண்ணா மலை. (௯௬)

அஞ்சு புலனு மடக்கி யறிவுடையோர்
வஞ்ச வினைப்பிறவி மாயவே - நெஞ்சி
லழுத்துமலை யன்ப ரனவரதம் போற்றி
வழுத்துமலை யண்ணா மலை. (௯௭)

கதித்தமுனி பாலகன்மார்க் கண்டனையே சீறிப்
பதைத்துவருங் காலன் படவே - யுதைத்ததொரு
வீரமலை சற்குருவாய் மேவியெனை யாண்டபட்ச
வாரமலை யண்ணா மலை. (௯௮)

இமயவரும் பத்தருமா கேசுரருங் காணச்
சமயகுரு வாநந்தி தாங்க - வுமையொருபங்
கானமலை வாக்குமனங் காயந் தமக்கரிய
வானமலை யண்ணா மலை. (௬௯)

ஆத்தி கடுக்கைமுத லானமல ரைந்தெழுத்தாற்
சாத்தி யடியவருந் தக்கோரு - மேத்திப்
புகழுமலை யாங்கவரைப் பொற்கொடியோ டெய்தி
மகிழுமலை யண்ணா மலை. (௭௦)

மாலூன்றிச் செய்யு மணந்தகைந்து சுந்தரனைக்
காலூன்றி யாளக் கருணையாய்க் - கோலூன்றித்
தந்த விருத்த சதுர்வே தியனாக
வந்தமலை யண்ணா மலை. (௭௧)

அறுகு மதியு மணிமுடிமேற் கூடன்
மறுகுதனி லடியார் வாழ - விறகு
சுமந்தமலை போற்றிசெயுந் தொண்டரகந் தோறு
மமர்ந்தமலை யண்ணா மலை. (௭௨)

மட்டுலவு கஞ்ச மலரோனு மயோனும்
திட்டமுடன் றேடித் திகைத்தாலு - மெட்டரிய
ஞானமலை பார்மீது நாலுகத்தி னலுவடி
வானமலை யண்ணா மலை. (௭௩)

மறைவடிவாஞ் சோமாசி மாறன்மக டன்னி
லுறைவடிவாம் பங்கிலுமை யோடு - நிறைவடிவாய்ச்
சென்றமலை யந்தணர்சூழ் தெய்வக் கனகமணி
மன்றமலை யண்ணா மலை. (௭௪)

எப்பொருளு மாகி யிருசுடர்பா ராக
மெய்ப்பொருளு மாகி விளங்குமலை - கைப்பொருளை
யொத்தமலை யென்றலைமே லோநமச்சி வாயனடி
வைத்தமலை யண்ணா மலை. (௭௫)

பல்லுயிருங் கேட்டறியப் பார்த்தன்கை யாலடித்த
வில்லடியும் புத்தன் மிகவெறிந்த - கல்லெறியும்
பட்டமலை மன்மதனைப் பார்வையினால் வெந்துவிழ
வட்டமலை யண்ணா மலை. (எசு)

வானை யுருவ வளர்ந்தமலை வாமபச்சைத்
தேனையொரு பாகத்திற் சேர்த்தமலை - யானை
யணித்திரள்சேர் சார லதில்வேய்க ளீன்ற
மணித்திரள்சே ரண்ணா மலை. (எஎ)

அன்று கயிலை யரக்க னெடுத்தவப்போ
நின்றவனைக் காலா னெரித்தமலை - யென்று
மருத்துமலை யெவ்வுலகு மன்பரிடர் நோய்க்கு
மருத்துமலை யண்ணா மலை. (எஅ)

அன்றுபதி னாறுவய தானமார்க் கண்டர்தமக்
கென்றுமீ ரெண்வயதே யென்றமலை - நின்று
சிறக்குமலை தன்னடியார் செய்தகுறை யெல்லா
மறக்குமலை யண்ணா மலை. (எகூ)

அன்றிருவர் தேட வனல்வடிவாய் நின்றமலை
நின்றுருகுந் தொண்டருக்கு நேயமலை - யென்று
நடிக்குமலை வேள்வியிலே நாரணனை யோட
வடிக்குமலை யண்ணா மலை. (அ0)

நஞ்சணியுங் கண்டமலை நாளு மடியவர்தம்
வஞ்சவினை தானறுக்க வந்தமலை - நெஞ்சை
யிளக்குமலை யன்பர்க் கினியபே ரின்பம்
வளர்க்குமலை யண்ணா மலை. (அக)

பையரவஞ் சூடுமலை பத்தர்பணிந் தேத்துமலை
கையின்மழு மான்றரித்த காட்சிமலை - துய்ய
நதியணியும் வேணியின்மே னறுமலர்க் கொன்றை
மதியணியு மண்ணா மலை. (அஉ)

மயிலரவஞ் சேருமலை மான்புலிகள் கூடிப்
பயிலுமலை வானோர் பரவுங் - கயிலை
பொருந்துமலை யெந்நாளும் போற்றுமன்பர் நாவா
லருந்துமலை யண்ணு மலை. (அரு)

உற்றுப் புரத்தி லொருமூவர் தம்மைவைத்துப்
பற்றி யெரிந்துவிழப் பார்த்தமலை - நத்தியே
நாளுந் தனைத்தேடி நம்புமடி யார்தமையே
யாளுமலை யண்ணு மலை. (அச)

உள்ளும் புறம்பு மொருசெயலா மன்பருளங்
கொள்ளுமலை நாட்டங் குளிக்குமலை - துள்ளு
மெருத்தின்மே லேறுமலை யென்பிறவி நோய்க்கு
மருத்துமலை யண்ணு மலை. (அரு)

துன்ப மகற்றுமலை தொல்வினையை நீக்குமலை
யன்பர்தமை வாவென் றழைக்குமலை - தன்பதத்தைக்
காட்டுமலை தன்னைக் கருத்திலுனு மன்பரிடர்
வாட்டுமலை யண்ணு மலை. (அசா)

போதமுற்ற மெய்யடியார் புந்தியிலே வேரோட்டிப்
பாதமுச்சி மட்டாய்ப் படர்ந்தமலை - நாதந்
தழைக்குமலை யன்பர் தபோதனரை வாவென்
றழைக்குமலை யண்ணு மலை. (அஎ)

முப்போதும் பூசித்து மோகித்துப் போற்றுமவர்க்
கப்போது முன்னின் றருளுமலை - யெப்போதுந்
தாய்க்குமினி தானமலை சற்குருவாய் நாயேற்கு
வாய்க்குமலை யண்ணு மலை. (அஅ)

காலை யுதைத்தமலை கையில்மான் சூலமலை
வேலை விடமருந்தும் வெற்றிமலை - மாலை
யணிசேரு நீண்முடிமே லங்கரவ மீன்ற
மணிசேரு மண்ணு மலை. (அகூ)

மாறுபட்ட தக்கனுயிர் மாய்த்தமலை மாலயர்க்கு
நீறுபட்ட செந்தழலாய் நின்றமலை - கூறுங்கா
லொப்பனைக ளில்லா துயர்ந்தமலை நீண்முடிமே
லப்பணியு மண்ணு மலை. (கூ0)

பச்சைநிறந் தானுகிப் பாதிவடி வானமலை
கச்சையெனக் கட்செவியைக் கட்டுமலை - நிச்சயமாய்
மாளுமடியேனை மாளா வகையருளி
யாளுமலை யண்ணு மலை. (கூக)

மாறெருகை வெற்றி மழுவொருகை யானமலை
ஞானமுனி வோர்கணித்த நாடுமலை - யானை
யுரித்தமலை யம்மை யுமையாலே யார்க்கு
மருத்துமலை யண்ணு மலை. (கூஉ)

முல்லைமலர்க் கொன்றை முடிமே லணிந்தமலை
யெல்லையிலா மாதவர்க ளேத்துமலை - தில்லையிலே
நட்டமலை முப்புரத்தை நாடுமென்பர் மூவரைவிட்
டட்டமலை யண்ணு மலை. (கூங)

எல்லாருங் காணற் கினியமலை யென்னுடைய
பொல்லா வினையறுக்கப் போந்தமலை - சொல்லாரும்
நல்லமலை பொல்லாரை நாசமுறப் பார்க்கைக்கு
வல்லமலை யண்ணு மலை. (கூச)

ஆழி நெடுமா லயர்க்குமரி தானமலை
யூழின் வினை யன்பர்க் கொழிக்குமலை - யாழியிலே
நஞ்சழலைக் கண்டு நடுங்கினரைக் காக்குமலை
யஞ்சுமுகத் தண்ணு மலை. (கூரு)

எத்திசையுந் தோற்றுமலை யேறுகந்து நின்றமலை
சித்திவர மீந்தருளிச் செய்யுமலை - முத்தர்மனம்
பூணுமலை யண்டர் புகழுமலை நீண்டதொரு
மாணுமலை யண்ணு மலை. (கூசா)

வண்மைக் குணத்தவனை மாதவனை வந்தடைந்தோர்
தம்மைத் தளராமற் றாங்குமலை - யுண்மை
பொருந்துமலை விண்ணவர்கள் போகாம லால
மருந்துமலை யண்ணா மலை. (சஎ)

வானத்துப் பூந்தருவை வாங்கிக் களிறுபிடி
யானைக்கு நீட்டி யணையுமலை - ஞானத்த
ருன்னுமலை பெங்நாளு மோநமச்சி வாயகுரு
மன்னுமலை யண்ணா மலை. (சஅ)

அழியாத முத்தி யளிக்குமலை யன்பர்க்
கொழியா வினையை யொழித்துக் - கழியாத
வேற்றுப் பிறப்பை யினியமையு மென்றருளி
மாற்றுமலை யண்ணா மலை. (சசு)

பெற்றந் தனிற்றோன்றிப் பெய்வளையுந் தானுமென்
குற்றங் களைந்தருளிக் கொண்டமலை - நித்தம் [றன்
புதியமலை கங்கையணி பொற்சடைமேல் வைத்த
மதியமலை யண்ணா மலை. (க00)

அண்ணா மலைமாலை யானதமிழ் வெண்பாவாற்
றண்ணாரு மைந்தெழுத்தைச் சாற்றியநூற்-பண்ணாக
கற்றவர்கள் கேட்டவர்கள் காசினியிற் பேரின்ப [க்
முற்றுலகை யாள்வ ருவந்து. (க0க)

மன்னுதிரு வண்ணா மலையைவல மாகவந்துன் [ருணை
னுன்னுதிரு வைந்தெழுத்தை யோதினேன்-றென்ன
நாயகத்தைக் கோவிலிலே நான்கண்டேன் பெற்றெடு
த்த, தாயகத்தைக் கண்டவர்பொற் றாள். (க0உ)

அண்ணாமலை வெண்பா முற்றிற்று.

புத்தகவிளம்பரம்.

விநாயகரகவல் - இரட்டைமணிமாலை, விநாயக கவசம் - சிவகவசம் - சத்திகவசம் - சரஸ்வதி தோத்திரம் - இலக்குமி தோத்திரம், வேழமுகம் - உலகநீதி, அருணகிரிநாதர் வகுப்புத்தொகுப்பு, கந்தரலங்காரம், கந்தரனுபூதி, திருமுருகாற்றுப்படை, வேல்விருத்தம் - மயில்விருத்தம், முருகரந்தாதி, கந்தர் சஷ்டி கவசம், கந்தா கலிவெண்பா, சுந்தரர் வேடுபறி - பஞ்சரத்னத் திருப்புகழ், திருத்தொண்டத் தொகை - போற்றிக்கலிவெண்பா, நமச்சிவாயமாலை, சரஸ்வதி யந்தாதி, வராகிமாலை, கபிலரகவல், இந்த 17 - புத்தகங்களும் ஒன்றாகக் கட்டியது. அணா - 8, தபாற்கூலி அணா - 1. (32 Mo. Royal.)

அருணகிரி யந்தாதி, திருக்கருவைக் கலித்துறை யந்தாதி, ஷை பதிற்றுப்பத் தந்தாதி, ஷை வெண்பா வந்தாதி, மதுரைப் பதிற்றுப்பத் தந்தாதி, பந்தனந்தாதி பந்தன் சரித்திரத்துடன், பொன்வண்ணத் தந்தாதி, பழமலை யந்தாதி, அபிராமி யந்தாதி, சௌந்தரி யலகரி, காசிக் கலம்பகம், திருவருணைக் கலம்பகம், மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ், திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ், முத்துக் குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், ஆதிபுரி வடிவுடையம்மை பிள்ளைத்தமிழ். இந்த 16 - புத்தகங்களும் ஒன்றாகக் கட்டியது ரூ - 1, தபாற்கூலி அணா - 2. (16 Mo- Royal.)

பட்டினத்துப்பிள்ளையார் திருப்பாடற்றிரட்டு, உடற்கூற்றுவண்ணம், அவர் சரிதத்துடன் அணா-உ, தபாற்செலவு அணா-௧.

திருப்புகழ்	முதல் பாகம்	..	0	3	0
ஷை	உ-ம் பாகம்	...	0	4	0
ஷை	௩-ம் பாகம்	...	0	4	0
ஷை	௪-ம் பாகம்	...	0	4	0

புத்தகம் ௪-க்கு தபாற்செலவு அணா-௧